# 4
# ஏன் ஓட்டு போட வேண்டும்? ஏன் ஓட்டு போடக் கூடாது?

யாருக்கு ஓட்டு போடுவது என்று முடிவு செய்வதற்கு முன்னால், எல்லா தரப்பு வாதங்களையும் பரிசீலிக்க வேண்டும் என்றார் ஒரு நண்பர். எனவே, சன் டி.வி, ஜெயா டி.வி. இரண்டின் செய்திகளையும் அடுத்தடுத்து ஒவ்வொரு முழு நாள் பார்த்ததில், கடும் தலைவலிதான் மிச்சம்!

இருந்தபோதிலும், கடந்த ஒரு மாத காலப் பிரசாரம், பத்திரிகைச் செய்திகள் எல்லாவற்றையும் அலசி ஆராய்ந்த பிறகு, ஒவ்வொரு கட்சியைப் பற்றியும் ஸ்வாட் அனாலிசிஸ் (Strength, Weakness, Opportunities, Threats) செய்து பார்த்தேன். ஆப்பர்சூனிட்டியும், த்ரெட்டும் அந்தந்தக் கட்சி அதனதன் நலனுக்காகச் செய்துகொள்ள வேண்டியவை. அவற்றின் பலமும், பலவீனமும் மட்டுமே வாக்காளர்களான நம்மைப் பாதிக்கக்கூடியவை. எனவே, அந்த அடிப்படையில் ஒவ்வொரு கட்சியாக அதற்கு நாம் ஏன் ஓட்டு போடலாம், ஏன் ஓட்டு போடக்கூடாது என்று பார்ப்போமா?

## தி.மு.க:

### ஏன் ஓட்டு போட வேண்டும்?

1. தமிழ்நாட்டில், அரசியலில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பெரியாரின் சமூக நீதி சித்தாந்தத்தின் தொடர்ச்சியாக இன்னும் ஓரளவேனும் இருந்து வரும் கட்சி.
2. தனி நபர் வழிபாட்டு மடமாக ஆக்கப்பட்டு வரும் சட்ட மன்றத்தை மீட்டு, அதன் நடவடிக்கைகளை மறுபடியும் ஓரளவு ஜனநாயகப்பூர்வமாக நடத்தக்கூடிய ஆளுங்கட்சியாக இருப்பதற்கான தகுதி உள்ள கட்சி.
3. எந்தப் பிரச்சனையாக இருந்தாலும் அது பற்றி பத்திரிகை - மீடியாவுடன் நேரடியாகப் பேசி, தயங்காமல் கருத்து

தெரிவிக்கக்கூடியவர் கருணாநிதி என்பதால், அரசு என்ன நினைக்கிறது என்பதைப் பொது மக்கள் குழப்பமின்றித் தெரிந்துகொள்ள வசதியான கட்சி.

**ஏன் ஓட்டு போடக் கூடாது?**

1. எவ்வளவு பூசி மெழுகினாலும், கருணாநிதி - மாறன் குடும்பத்தின் நலனுக்கு முக்கியத்துவம் தந்து இயக்கப்படும் கட்சி.
2. பதவி பேரங்களுக்காக மட்டுமே டெல்லி அரசியலைப் பயன்படுத்தும் கட்சி. அங்கே, இங்கே என இரண்டு இடங்களிலும் இந்த ஆட்சி அதிகாரத்தில் இருந்தால், கட்சித் தலைவர் குடும்பத்தின் வியாபாரத் தொழில் துறை ஏகாதிபத்திய விஸ்தரிப்பு கட்டுக்கடங்காமல் போய்விடும்.
3. பகுத்தறிவு, தமிழ்ப்பற்று போன்றவற்றையெல்லாம் வெற்று கோஷங்களாக மட்டுமே பயன்படுத்திக்கொண்டு, நடைமுறையில் அவற்றுக்கு எதிராக எல்லாவற்றையும் செய்யக்கூடிய கட்சி.
4. தமிழ்நாட்டில் ஊழல், போலீஸ் அராஜகம், தொழிலாளர் மீதான ஒடுக்குமுறை என்று எந்தச் சீர்கேட்டை எடுத்துக் கொண்டாலும், அதைத் திட்டமிட்டு கச்சிதமாகவும் அறிவியல் பூர்வமாகவும் செய்வதை ஆரம்பித்து விரிவுபடுத்தியது கருணாநிதியின் முதல் ஆட்சிக்காலம்தான்!

## பாட்டாளி மக்கள் கட்சி:

**ஏன் ஓட்டு போடலாம்?**

சினிமா, பத்திரிகை போன்ற ஊடகங்களில் சமூக விரோதக் கருத்துக்கள் ஊக்குவிக்கப்படக் கூடாது என்று தொடர்ந்து வலியுறுத்தி வருவதால்.

**ஏன் ஓட்டு போடக் கூடாது?**

1. எவ்வளவு பூசிமெழுகினாலும், ராமதாஸ் - அன்புமணி குடும்ப வாரிசு அரசியலையும் சுயநலத்தையும் ஊக்குவிக்கும் கட்சி.
2. குறிப்பிட்ட சாதி நலனுக்காக மட்டுமே இயங்கும் கட்சி.
3. அதிகாரத்தில் இருக்கவேண்டும் என்பதற்காக எந்தக் கொள்கை அடிப்படையும் இல்லாமல் அடிக்கடி அணி மாறக்கூடிய கட்சி.

## காங்கிரஸ்:

### *ஏன் ஓட்டு போட வேண்டும்?*

*1. மாநிலக்கட்சித் தலைவர்களான கருணாநிதியும் ஜெயலலிதாவும் தலா 24 கோடி ரூபாய் சொத்துக் கணக்கு காட்டியுள்ள வேளையில், அனைத்திந்திய கட்சியான காங்கிரஸின் தலைவி சோனியாவின் சொத்து மதிப்பு வெறும் 7 கோடிதான் என்று காட்டப்பட்டு இருப்பதால்.*

*2. மதச்சார்பற்ற கொள்கையில், தி.மு.க, அ.இ.அ.தி.மு.க. போல் ஊசலாடாமல், நிலையாக இருந்து வருவதால்.*

*3. தகவலறியும் உரிமைச் சட்டம், கிராமப்புற வேலைவாய்ப்புச் சட்டம் போன்ற அதிமுக்கியமான அடிப்படைச் சட்டங்களைக் கொண்டு வந்ததால்.*

### *ஏன் ஓட்டு போடக் கூடாது?*

*1. காமராஜருக்குப் பிறகு, சுயமரியாதை இல்லாத கட்சியாக தமிழகத்தில் ஆகிவிட்டதால். சோனியாவுக்குப் பக்கத்தில் தயாநிதி மாறனை உட்கார வைத்துவிட்டு, பின்னிருக்கையில் ப.சிதம்பரம் உட்காரவைக்கப்படுகிறார்! கூட்டணி ஆட்சி வேண்டும் என்று கேட்டதற்காக இளங்கோவனுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுத்த கருணாநிதி, தானே இப்போது கூட்டணி ஆட்சிக்குத் தயார் என்று சொல்லும்போது, குறைந்தபட்சம் இளங்கோவனிடம் அவர் வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்றுகூட வலியுறுத்தத் தோன்றாத முதுகெலும்பற்ற கட்சி.*

*2. கட்சி நலன் என்று பார்க்காமல் கோஷ்டி நலனை மட்டுமே பார்க்கக்கூடிய ஏராளமான தலைவர்கள்தான் தமிழகத்தில் கட்சி என்று ஆக்கிவிட்டதால்.*

*3. பொருளாதாரச் சீர்திருத்தம் என்ற பெயரில் தொழிலாளர்கள் நலனுக்கு எதிரான பல நடவடிக்கைகளைப் பிடிவாதமாக மேற்கொள்வதால்,*

## இடதுசாரிக் கட்சிகள்:

### *ஏன் ஓட்டு போட வேண்டும்:*

*1. சுயநலம் இல்லாத நேர்மையான தலைவர்கள் இருக்கும் ஒரே அணி கம்யூனிஸ்ட் - மார்க்சிஸ்ட் கட்சிகள் இருக்கும் இடதுசாரி*

அணி மட்டுமே என்பதால். மேற்கு வங்க முதலமைச்சர் புத்ததேவ் பட்டாச்சார்யாவின் சொத்துக் கணக்கு வெறும் 75 ஆயிரம் ரூபாய்கள்!

2. அடித்தட்டு மக்கள் நலன் பற்றி இன்னமும் சிந்திக்கும் ஒரே அணி!

### ஏன் ஓட்டு போடக் கூடாது?

1. தங்கள் கொள்கை, நேர்மை, எதற்கும் சம்பந்தமில்லாத கட்சிகளான தி.மு.க., அ.இ.அ.தி.மு.க. என இரண்டுடனும் மாறி மாறி சில சீட்டுகளுக்காக கூட்டணி வைத்துக்கொள்வதால்.
2. தனித்து நின்று கட்சியை வளர்க்க, நேற்று வந்த விஜயகாந்த்துக்கு இருக்கும் துணிச்சல்கூட, நூறாண்டு கால இடதுசாரி இயக்கத்துக்கு இல்லாததால்.

## அ.தி.மு.க:

### ஏன் ஓட்டு போடலாம்?

1. மத்தியிலும் மாநிலத்திலும் ஒரே கட்சி அதிகாரத்தில் இருந்தால், அதன் அராஜகம் கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும் ஆபத்து இருப்பதால், இப்போது டெல்லியில் தி.மு.க. ஆட்சியில் இருக்கும் நிலையில் அதையே இங்கேயும் ஆள விடாமல் இருப்பதற்காக, அ.தி.மு.க - வுக்குப் போடலாம். 1991-96-ல் ஜெயலலிதாவின் ஆட்சி அராஜகத்தைவிட 2001-06-ல் அராஜகங்கள் சற்றே குறைவாக இருந்ததற்கும் இதுவே காரணம்.
2. சத்துணவு, எய்ட்ஸ் கல்வி, மகளிர் சுய உதவிக் குழுக்கள், மொழி வளர்ச்சி, சென்னைக் குடிநீர் திட்டம், மழை நீர் சேகரிப்புத் திட்டம் போன்ற சில துறைகளில் அமைதியாக, சீரான பணிகளைச் செய்து வருவதற்காக.
3. எந்த நோக்கத்துக்காகச் செய்திருந்தாலும், சட்டத்துக்கு அப்பாற்பட்டவர்கள் யாரும் கிடையாது என்ற நம்பிக்கையை ஜெயேந்திரரைக் கைது செய்ததன் மூலம் ஏற்படுத்தியதற்காக.

### ஏன் ஓட்டு போடக் கூடாது?

1. ஜனநாயக அணுகுமுறையே இல்லாமல் செயல்படும் பிடிவாத குணத்தைத் தன் சாதனையாகக் கருதும் ஜெயலலிதாவின் தலைமை.
2. உட்கட்சி ஜனநாயகம், அடுத்த வரிசைத் தலைவர்கள் என எந்த ஜனநாயக அமைப்பிலும் நம்பிக்கை இல்லாத கட்சியாக எம்.ஜி.ஆர். காலத்திலிருந்து இன்றுவரை இருந்து வருவதால்.

3. சட்டமன்றத்தில் தனி நபர் துதி பாடுவதற்கு மட்டுமே அனுமதித்து, மாற்றுக் கருத்துக்களுக்கு இடம் இல்லாமல் செய்துவருவதால்.

4. எல்லா பிரிவு மக்களுக்கு எதிராகவும் எடுத்த கொடூர நடவடிக்கைகளைத் திரும்பப் பெற்றாலும், மறுபடியும் அதேபோல நடக்காது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லாத ஆட்சி என்பதால்.

## ம.தி.மு.க:

### ஏன் ஓட்டு போட வேண்டும்?

1. வைகோ சிறந்த பார்லிமென்ட்டேரியன், சிறந்த பேச்சாளர் என்டர்டெயினர், மனித உரிமை ஆர்வலர் என்பதைத் தவிர, வேறு எந்தக் காரணமும் இல்லை.

### ஏன் ஓட்டு போடக் கூடாது? 1.

1. வைகோவைத் தவிர, அவர் கட்சியில் தேறக்கூடிய ஒரு தலைவர்கூடக் கிடையாது.

2. எதற்கும் மிகையாக உணர்ச்சிவசப்படுகிற தலைமை.

## விடுதலைச் சிறுத்தைகள்:

### ஏன் ஓட்டு போட வேண்டும்?

1. தொடர்ந்து அயராமல் களத்தில் தீவிரமாக இருக்கிற தலித் அமைப்பு!

### ஏன் ஓட்டு போடக் கூடாது?

1. தலித் மக்களின் முதன்மை தேவைகளான கல்வி, வேலை விஷயங்களில் அக்கறை காட்டாமல், அவர்களை இதர கட்சிகளைப் போலவே ஓட்டு வங்கியாக மட்டும் கருதுவது.

2. தலித் உட்பிரிவுகளிடையே ஒற்றுமைக்கு முயற்சிக்காமல் பிளவுகளை நீடிப்பது.

3. சந்தர்ப்பவாதக் கூட்டணி அரசியலையே பின்பற்றுவது.

இரண்டு அணிகளும் இலவசங்களைப் போட்டி போட்டுக்கொண்டு அறிவித்து, தமிழக மக்களைச் சுயமரியாதை அற்ற பிச்சைக்காரர்களாகவே வைத்திருக்க விரும்புவது அருவருப்பை ஏற்படுத்துகிறது. தன் சொந்தக் காசில் ஒரு பொருளை வாங்கி

மகிழ்ச்சி அடைவதற்கு ஏற்ற வாங்கும் சக்தியைத் தமிழருக்கு ஏற்படுத்துவதில் இரு அணிகளுக்கும் அக்கறையே இல்லை.

மொத்தத்தில், இரு அணிகளுக்குமே அவர்களுடைய குறைகளை மீறி ஆதரவளிக்கத் தூண்டும் அளவுக்கு எந்தப் பலமான காரணமும் இல்லை.

களத்தில் எஞ்சியிருப்பது வேறு யார், யார்? பாரதிய ஜனதா, புதிய தமிழகம் இரண்டும் எந்த விதத்திலும் நம்பிக்கை தருவதாக இல்லை. கார்த்திக்கின் ஃபார்வர்ட் பிளாக், தற்போதைய தேர்தல் சோக நாடகத்தின் காமெடி டிராக்காக மட்டுமே இருக்கிறது. அடிஷனல் காமெடியாக சிம்ரன் முதல் தியாகு வரை நட்சத்திரப் பட்டாளமே உலா வருகிறது.

கடைசியில் எஞ்சியிருப்பது புதிய கட்சியான நடிகர் விஜயகாந்த்தின் தேசிய முற்போக்கு திராவிட கழகம்தான். அதையும் அலசலாம்.

## தே.மு.தி.க:

### *ஏன் ஓட்டு போட வேண்டும்?*

1. இதுவரை ஆட்சியில் இல்லாததால், ஊழல், நிர்வாக முறைகேடு என்று எந்தக் கறையும் இல்லை. புதுத் துடைப்பம் நன்றாகப் பெருக்கும் என்ற நம்பிக்கைதான்.
2. ரஜினி மாதிரி அரசியலுக்கு வருவதைப் பற்றி குழப்பியடிக்காமல், சொன்னபடி விஜயகாந்த் வந்திருப்பதால்.

### *ஏன் ஓட்டு போடக் கூடாது?*

1. கட்சியின் கொள்கை என்று அறிவிக்கப்பட்டிருப்பது எதுவும் புதிய அணுகுமுறையில் இல்லை. எம்.ஜி.ஆரின் அண்ணாயிசத்துக்குச் சமமான குழப்ப சித்தாந்தம்தான்.

2, தேர்தல் அறிக்கையில் கழகங்களைப் போலவே இலவசங்களை வாக்குறுதிகளாக அள்ளி வீசியிருப்பதால்.

3. கழகங்களைப் போலவே குடும்ப அரசியலுக்கு ஆரம்பத்திலேயே வித்திட்டிருப்பதால்.

எனவே, ஓட்டு போடத் தகுதியாக ஒரு கட்சிகூட இந்தத் தேர்தலில் கண்ணுக்குப்படவில்லை. கருத்துக்கும் எட்டவில்லை.

இப்படிப் பட்ட சூழலில் தனிப்பட்ட வேட்பாளரின் தகுதியை மட்டும் பார்த்து ஓட்டு போடலாம் என்று சிலர் சொல்கிறார்கள். அதிலும் பயனில்லை. தனி மனிதராக ஒருவர் சிறந்தவராக இருந்தாலும், அவரை நிறுத்திவைத்திருக்கும் கட்சி சரி இல்லை என்றால் என்ன பயன்? அவரால் அந்தக் கட்சிக்குள் இருந்து கொண்டு என்னதான் நல்லது செய்ய முடியும்? அப்படிப்பட்டவர்களைக் கட்சிகள் சீக்கிரமே வெளியேற்றிவிடும். இடதுசாரிகள் எவ்வளவுதான் நேர்மையானவர்களாக இருந்தாலும், கூட்டணியில் இருந்து கொண்டு என்ன செய்ய முடிகிறது? அது போலத்தான்.

எனவே

## ஓட்டு போடாமல் இருந்துவிட முடியுமா?

கூடாது. கூடவே கூடாது!

எந்தக் கட்சியும் சரியில்லை, எந்த வேட்பாளரும் சரியில்லை என்றால், அதைத் தெரிவிக்கவும் நமது தேர்தல் விதிகள் இடம் தந்திருக்கின்றன. அதன்படி, வாக்குச் சாவடியில் விரலில் மை வைத்த பிறகு, அதிகாரியிடம் '49 ஓ' பதிவு செய்யப் போகிறேன் என்று தெரிவிக்கலாம்.

இப்படி '49 ஓ' போடுவதால் என்ன பயன்? அதுதான் அரசியல் கட்சிகளுக்கு வாக்காளர்கள் தரும் எச்சரிக்கை மணி. ஒரு சாதி கட்சிக்கு ஒவ்வொரு தொகுதியிலும் சுமார் 3,000 ஓட்டு இருந்தாலே கூட்டு சேரத் துடிக்கும் கட்சிகள், தொகுதிக்கு 5 ஆயிரம் '49 ஓ' விழுந்தால், நிச்சயம் அதைப் புறக்கணிக்க முடியாது. தங்களைத் திருத்திக்கொள்ளத் தொடங்கியாக வேண்டிவரும்.

அப்போதுதான் அடுத்த கட்டமான அடிப்படை மாற்றத்தை நோக்கி நாம் போக முடியும். விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைக்கு நம் தேர்தல் முறை மாறினால்தான், எல்லா கட்சிகளின் அசல் பலமும் பிரதிபலிக்கும். அப்போது தான் கூட்டணி என்பதற்கு சரியான அர்த்தமும் இருக்க முடியும்.

இப்போது யாரும் தங்கள் பலத்தின் அடிப்படையில் கூட்டு சேருவதில்லை. பலவீனங்களின் அடிப்படையிலேயே சீட்டு பிரித்துக்கொள்கிறார்கள். தமிழ் நாட்டில் தி.மு.க-வுக்கும் அ.தி.மு.க-வுக்கும் நிரந்தரமாக இருப்பது, தலா சுமார் 24 சதவிகித ஓட்டுதான். அதன்படி அவற்றுக்கு சட்டமன்றத்தில் தலா 50 முதல்

*60 சீட்டுகள்தான் இருக்க முடியும். வைகோவுக்கோ, திருமாவுக்கோ, இடதுசாரிகளுக்கோ தலா 5 முதல் 10 சதவிகிதம் இருக்குமானால், அவர்களுக்கெல்லாம் தலா 10 முதல் 20 எம்.எல்.ஏ-க்கள் நிச்சயம் இருக்க முடியும். அப்படிப்பட்ட சூழலில் கூட்டணி என்பதைக் கொள்கை சார்ந்து அமைக்க முடியும்.*

*இந்தப் படிக்கட்டுகளில் எல்லாம் நாம் ஏறிப்போவதற்கு முதல் படிக்கட்டு-49ஓ!*

*தமிழ்நாட்டில் விஜயகாந்த் கூட எல்லா தொகுதிகளிலும் போட்டியிடவில்லை. எல்லா தொகுதிகளிலும் இருக்கும் ஒரே வேட்பாளர் 49 'ஓ'தான்!*

**ஆனந்த விகடன்**
***14.05.2006***

# 12
# எரிபொருள் பிரச்சனைக்கு என்னதான் தீர்வு?

கருணாநிதிக்கும் ஜெயலலிதாவுக்கும் இடையே நிறைய ஒற்றுமைகள் உள்ளன. அதில் ஒன்று, எதிர்க்கட்சியாக இருக்கும்போது, ஆட்சி மீது ஒரே மாதிரி விமர்சனம் வைப்பது. ஆனால் ஆட்சிக்கு வந்ததும், அதேபோல தானும் நடந்துகொள்வது. இதற்குச் சிறந்த அண்மைக் கால எடுத்துக்காட்டு - பெட்ரோல் விற்பனை வரி குறைப்புப் பிரச்சனை .

ஜெ. ஆட்சியின்போது, மத்திய அரசு பெட்ரோல் விலையை உயர்த்தியதும், 'மாநில அரசு விற்பனை வரியைக் குறைக்கலாம்' என்றார் கருணாநிதி. 'அப்படிச் செய்தால் பஸ் கட்டணம் உயரும்; எங்கள் ஆட்சியில்தான் பெட்ரோல் விலை உயரும் போதெல்லாம் பஸ் கட்டணம் உயர்த்தப்படவில்லை' என்று வாதிட்டார் ஜெ. இப்போது இருவரும் ஒருவர் மற்றவர் வசனத்தைப் பேசிக்கொண்டு இருக்கிறார்கள்.

பெட்ரோல், மின்சாரம், தண்ணீர் போன்ற அடிப்படைப் பிரச்சனைகளில், கட்சி விரோதங்களுக்கு அப்பாற்பட்டு சிந்திக்கக்கூடிய தலைவர்கள் எப்போது உருவாகப் போகிறார்களோ, தெரியவில்லை.

பெட்ரோல் விலையில் கணிசமான பங்கு, அரசாங்க வரிகள்தான். ஒரு லிட்டர் பெட்ரோலின் விலை 47 ரூபாய் என்றால், அதில் மத்திய அரசின் தீர்வை வரிகள் 15 ரூபாய். மாநில அரசின் விற்பனை வரி 10 ரூபாய். டீலர் கமிஷன் போன்றவை 2 ரூபாய். எண்ணெய் கம்பெனிக்குக் கிடைப்பது 20 ரூபாய்தான். ஒரு லிட்டர் பெட்ரோல் தயாரிக்கத் தேவையான குரூட் ஆயிலின் விலையே 20 ரூபாய் ஆகி விடும். குரூடை பெட்ரோலாக மாற்றும் செலவெல்லாம் கம்பெனிக்கு நஷ்டம். வரிகளைக் குறைக்காமல் பெட்ரோல் விலையைக் குறைக்க முடியாது. எந்த அரசும் தன் வரிகளைக் குறைத்துக்கொள்ள முன் வராது. காரணம், வரி வருமானத்திலிருந்துதான் ஏழைகளுக்கான கெரசின் விலைக்கு மான்யம் தர முடியும்.

எனவே, பெட்ரோல் விலைப் பிரச்சனைக்கு தொலைநோக்குத் தீர்வுகளைத்தான் நாம் சிந்தித்தாக வேண்டும். மாற்று எரிபொருள் என்று கருத்தரங்குகளில் பேசிக்கொண்டு இருக்கிறார்களே தவிர, அரசுத் தரப்பிலிருந்து பெரிய அளவில் இதற்கான நடவடிக்கைகள் இல்லை.

ஆனால், குறைந்த விலையில் மாற்று எரிபொருள் சாத்தியம் என்பதை இரண்டு தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. ஒன்று, எத்தனால் (மீமீலீணீஸீஷீறீ) பற்றியது.

எத்தனால் உற்பத்தியைப் பெருக்கினால் பெட்ரோலியப் பொருட்களைப் பயன்படுத்துவதைக் குறைக்க முடியும். கெரசினுக்குச் சிறந்த மாற்று எத்தனால் என்பது நிம்ப்கர் அக்ரிகல்ச்சுரல் ரிசர்ச் இன்ஸ்ட்டிடியூட்'டின் (NARI) கருத்து. எத்தனாலுக்கு அரசு தீர்வை வரி விதிக்காமல் இருந்தால், அதை லிட்டர் 10 ரூபாய் விலையில் விற்க முடியும்.

எத்தனால் தயாரிக்கக் கரும்புதான் அதிகம் பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால், கரும்பைவிட குறைவான பாசனத் தண்ணீர் தேவைப்படும் சோள வகையை 'நாரி' அறிமுகப்படுத்திச் சுமார் 40 வருடம் ஆகிவிட்டது. இந்தச் சோளக்கதிரிலிருந்து ரொட்டி தயாரிக்கலாம். சோளத்தண்டிலிருந்து எத்தனால் வடிக்கலாம். சக்கை மாட்டுக்குத் தீவனமாகும். நான்கு மாதப் பயிர் என்பதால், வருடத்துக்கு இருமுறை சாகுபடி செய்யலாம். விவசாயிகளுக்கும் இது லாபகரமானது.

பெட்ரோலில் தண்ணீர் கலந்து எரிக்க முடியாது. எத்தனாலில் தண்ணீர் கலக்கலாம். சரிபாதி எத்தனால் - தண்ணீர் கலந்து எரிக்கக்கூடிய ஸ்டவ்வும் உருவாக்கப்பட்டிருக்கிறது. எல்.பி.ஜி. எரிவாயுவுக்கு நிகராக இதன் எரிசக்தி இருக்கிறது என்கிறார்கள் விஞ்ஞானிகள். எத்தனாலைக்கொண்டு நூறு வாட் பல்புக்குச் சமமான வெளிச்சம் தரக்கூடிய லாந்தர் விளக்கையும் வடிவமைத்திருக்கிறார்கள்.

எத்தனாலைக்கொண்டு மின்சாரமும் தயாரிக்கலாம். டூ வீலர் இன்ஜினில் சிறிய மாற்றங்கள் செய்த பின், அதை எத்தனால் கொண்டு இயக்கி, பேட்டரியைச் சார்ஜ் செய்து மின்சாரம் தயாரிக்கலாம். ஓடும் போது டூ வீலர். ஓடாத போது ஜெனரேட்டர்.

இன்றே, இப்போதே மாற்று எரி பொருள் வேண்டும் என்று அவசரப்படுபவர்களுக்கு, இரண்டாவது தகவல் இனிப்பானது. மகாராஷ்டிர மாநிலத்தில் இருக்கும் நாகபுரியில், பொறியியல் கல்லூரியில் நடைமுறை வேதியியல் பேராசிரியையாக இருக்கும் அல்காஸடகாவ்ங்கர் என்பவர் பிளாஸ்டிக்கிலிருந்து எரிபொருள்

தயாரிக்கிறார். இது ஏதோ ராமர்பிள்ளை சமாசாரம் அல்ல நாகபுரியில் நாற்றுக்கணக்கான வண்டிகள் இந்த எரிபொருளில் ஓடிக்கொண்டு இருக்கின்றன.

இந்த எரிபொருள் தயாரிக்கும் தொழிற்சாலையை மூன்று ஆண்டுகளாக நடத்திவருகிறார் அல்கா, ஒரு கிலோ பிளாஸ்டிக் கழிவிலிருந்து சுமார் 800 மில்லி லிட்டர் எரிபொருள் தயாரிக்க முடிகிறது. இந்தியன் ஆயில் கம்பெனி இவருடைய ஆலைக்குச் சுமார் 60 லட்ச ரூபாய் உதவி அளித்திருக்கிறது. தன் கண்டுபிடிப்புக்குக் காப்புரிமை பெற்றுள்ள அல்காவுக்கு அமெரிக்க, ஜப்பான் தனியார் கம்பெனிகளிடமிருந்தும் அழைப்பு வந்திருக்கிறது. இந்தியாவின் பல பாகங்களில் இப்படிப்பட்ட தயாரிப்பு ஆலைகளை நிறுவ, அல்கா திட்டமிட்டிருக்கிறார். இந்தியாவில் தினமும் சுமார் 8 ஆயிரம் டன் பிளாஸ்டிக் கழிவுகள் குவிந்தவண்ணம் உள்ளன. அதில் பாதியை பெட்ரோல் எரிபொருளாக மாற்றினாலே, தினம் 20 லட்சம் லிட்டர் எண்ணெய் கிடைக்கும். இப்படியெல்லாம் நடக்குமானால்...? என்று கற்பனை செய்வதே பிரமிப்பை ஏற்படுத்துகிறது.

பெட்ரோல் மட்டுமல்ல, மின்சாரத் தயாரிப்புக்கும் மாற்று வழிகள் தேவைப்படுகின்றன. அனல், புனல், அணுமின்சாரம் அனைத்திலும் நமக்குச் சிக்கல்கள் உள்ளன.

தமிழகக் கிராமப் பகுதிகளில் செழிப்பாக வளர்ந்து கிடக்கும் கருவேல மரங்களைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்க முடியும், இவற்றை பாய்லரில் வாயுவாக்கி (ரீணீஉஉவீயீவீநீணீமீவீஷீஸீ) டர்பைன்களை இயக்கி மின்சாரம் தயாரிக்கும் பயோ-பவர் தொழில்நுட்பம் சூழலை மாசுபடுத்தாதது. இதெல்லாம் சாத்தியமா என்றால், ஏற்கெனவே தமிழ்நாட்டில் கோவை மாவட்டத்தில் பல்லடம் தாலுகாவில் சுல்தான் பேட்டை கிராமத்தில் இப்படிப்பட்ட ஓர் ஆலையை, இளம் தொழிலதிபர் வி.எஸ்.பிரகாஷ் சில ஆண்டுகளாக நடத்தி வருகிறார். தமிழ்நாடு முழுவதும் அரசு உதவியுடன் இப்படி நூற்றுக்கணக்கான மின் தயாரிப்பு ஆலைகளை நிறுவும் யோசனையையும், இந்தத் தனியார் நிறுவனம் அரசுக்கு அளித்திருக்கிறது,

பாதுகாப்புத் துறைக்கு 80 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கும் அரசு, மாற்று எரிசக்தி முயற்சிகளுக்கு ஆயிரம் கோடி ரூபாய்கூட ஒதுக்குவதில்லை. அதனால் தான் அல்காவின் கண்டுபிடிப்பு முதல் பிரகாஷின் முயற்சி வரை நாம் எதிர்பார்க்கும் வேகத்தில் நிகழ முடிவதில்லை.

பிளாஸ்டிக்கிலிருந்து எரிபொருள், சோளத்திலிருந்து எத்தனால், மரத்திலிருந்து மின்சாரம் எல்லாம் நாம் விரும்பும் வேகத்தில் நடக்க என்ன வழி?

நடக்காமல் இருப்பதற்கான காரணங்களை ஒழித்தாலே போதும்! முதல் காரணம், அரசாங்கங்கள் டெல்லியிலும் சரி, சென்னையிலும் சரி... பிரமாண்டமான திட்டங்களையே விரும்புவதுதான் (அதில் கமிஷன் நிறையக் கிடைக்கும்!). இரண்டாவது காரணம், அதிகாரத்தைக் குவித்து வைத்துக்கொள்ள விரும்புவதாகும்.

ஒரு பெரிய அணை கட்டி லட்சக்கணக்கானவர்களை வீடு காலி செய்வதைவிட, யாரையும் காலி பண்ணாமல் நூறு சிறு அணைகள் கட்டலாம் என விஞ்ஞானிகள் அடித்துச் சொல்கிறார்கள். அதே போல எத்தனால், பிளாஸ்டிக் பெட்ரோல், பயோபவர் எல்லாமே இருபது கிராமங்களுக்கு ஓர் ஆலை வீதம் சிறிய அளவில் ஏராளமாக உருவாக்கக்கூடியவை.

ஒவ்வொரு கிராமப் பஞ்சாயத்து யூனியனும் தனக்குத் தேவையான மின்சாரம், எரிபொருள் தயாரித்து தன்னிறைவுடன் இருக்க முடியும். மின்சாரத்தை நேஷனல் கிரிட்டில் சேர்க்க வேண்டுமென்ற கட்டாயம் தான் பெரிய ஆலைகளை உருவாக்குகிறது. கிரிட்டில் இணைக்காமல், கிராமத்துக்கு ஒரு மின்சப்ளை என்று லோக்கல் மின்சார விநியோகம் செய்ய, சிறு ஆலைகளைப் பயன்படுத்தலாம். இதெல்லாம் சாத்தியமா என்று அவநம்பிக்கைகொள்ளத் தேவையில்லை. ஆந்திர மாநிலத்தில் அம்ராபாத் கிராமத்தில் இருக்கும் சுமார் 90 குடும்பங்களுக்கு, விவசாயத்துக்கும் வீட்டு உபயோகத்துக்கும் தேவைப்படும் மின்சாரத்தைத் தயாரித்துத் தர, தமிழகத் தொழிலதிபர் பிரகாஷுக்கு அந்த அரசு அனுமதி வழங்கியிருக்கிறது. இந்த 25 கிலோவாட் ஆலை இன்னும் சில மாதங்களில் இயங்கத் தொடங்கும். அதற்குத் தேவையான கச்சாப் பொருளான மரத்துண்டுகள் முதல் உழைப்பு வரை எல்லாமே உள்ளூரிலேயே கிடைப்பவை.

உள்ளாட்சி அமைப்புகளிடம் கல்வி முதல் தொழில், மின்சாரம் வரை ஒப்படைத்தால், பெரும் மாற்றம் வரும். இப்படியெல்லாம் செய்ய வேண்டுமானால், டெல்லி தன் அதிகாரத்தை சென்னைக்கும், சென்னை தன் அதிகாரத்தை குப்பனாம்பட்டிக்கும் பிரித்துத் தரவேண்டும். அது நடக்காதவரை நம் கனவுகளும், முயற்சிகளும் ஏ.சி. கருத்தரங்க அறைகளுக்குள் முடக்கப்பட்டுத்தான் கிடக்கும்.

**ஆனந்த விகடன்**
***25.06.2006***

# 22
# மனைவி, துணைவி என்ன வித்தியாசம்?

தவறாமல் 'ஓ' பக்கங்கள் படித்து விட்டு விமர்சிக்கும் ஒரு நண்பர், சென்ற வார கேள்விகளைப் படித்துவிட்டு, ஒரு சவால் விடுத்தார். "ஒவ்வொரு வாரமும் பத்து கேள்விகள் தருவேன். அதில் ஐந்து கேள்விகளுக்கு பதில் சொன்னால் போதும். ஆனால், எந்தக் கேள்வியாக இருந்தாலும் பதில் சொல்லத் தயாரா?'' என்றார். "இதுதானே உன் முதல் கேள்வி? இதோ பதில்... ஓ!'' என்றேன்.

**பத்தில் ஐந்தைக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுத்தேன்.**

***1. தி.மு.கவின் நூறு நாள் ஆட்சி எப்படி?***

முதல் நூறு நாள் ஆட்சியை விமர்சிக்கத் தேவையில்லை. உள்ளாட்சித் தேர்தல் முடிந்த பின்பு வரும் நூறு நாள் ஆட்சியே நம் கவனத்துக்குரியது. உள்ளாட்சித் தேர்தலை மனதில்கொண்டு, கவர்ச்சி வாக்குறுதிகளை உடனடியாக ஓரளவேனும் நிறைவேற்றியாக வேண்டிய கட்டாயம் தி.மு.க. அரசுக்கு இருந்தது. அதனால் ஏற்படும் நிதி நிலை நெருக்கடிகளை அடுத்த நூறு நாட்களில் எப்படிச் சமாளிக்கப் போகிறது என்பதுதான் ஆட்சி பற்றிய உண்மையான உரைகல். லாட்டரியும், கள், சாராயக் கடைகளும் மறுபடியும் வராமல் சமாளித்தால், தி.மு.க. அரசு நிச்சயம் பெரும் பாராட்டுக்குரியது. பொருளாதாரம், நிர்வாகம் இவற்றைவிட இப்போதைய தி.மு.க. அரசு, சமூக நீதித் துறையில் அதிக மார்க் வாங்குகிறது.

***2. இட ஒதுக்கீடு பெற்றுள்ள சாதிகளில் வசதி படைத்த மேட்டுக்குடியினரே (கிரீமிலேயர்) அதிக இடங்களைச் சுருட்டிக்கொள்வதைப் பற்றி எல்லாரும் மழுப்புவது ஏன்?***

அரசியல், கல்வி, தொழில் என்று எந்தத் துறையை எடுத்துக்கொண்டாலும், துளியும் பண பலம் இல்லாதவர்களைவிட, ஓரளவேனும் பண பலம் உள்ளவர்கள்தான் முதலில் நுழையவும்,

நுழைந்த பின் தங்களுக்கென ஒரு இடத்தை உருவாக்கிக்கொள்ளவும் முடியும் என்பதும், வசதியற்றவர்கள் முண்டியடித்து, முட்டி மோதித்தான் தங்கள் இடத்தைப் பிடிக்க முடியும் என்பதும்தான் நீண்டகாலமாக சமூகத்தின் நிலை. ராஜாஜி, பெரியார், நேரு என்று அரசியலில் பெரும் தாக்கத்தை 20-ம் நூற்றாண்டில் ஏற்படுத்திய பலர், வசதியான பின்னணியில் இருந்து வந்தவர்கள்தான். அவர்களுடைய சமூக அக்கறைகள் தெளிவாக இருந்ததனால்தான், அவர்களைப் பின்பற்றி வந்த வசதியற்றவர்களான சத்தியமூர்த்தி, காமராஜர், அண்ணா போன்றவர்கள் தங்களுக்குரிய இடத்தைப் பெற முடிந்தது. சமூகப் பார்வையில் தெளிவும், தனக்குச் சமமான கூர்மையும் உடைய ஏங்கல்ஸ் போன்ற பணக்கார நண்பர் இருந்திராவிட்டால், வசதி குறைந்தவரான கார்ல்மார்க்ஸ் இன்னும் அதிக சிரமப்பட்டு இருப்பார்.

எனவே, இட ஒதுக்கீட்டிலும், அந்தந்த சாதியில் ஓரளவு வசதியுள்ளவர்களே முதல்கட்டத்தில் உயர் கல்வி வரை வர முடியும். அப்படி வருபவர்களில் அக்கறை உள்ளவர்கள்தான் மற்றவர்களை அரசியல்படுத்தித் திரட்ட முடியும். அந்த நிலைக்கு வருவதற்கு அந்தந்த சாதி ஏழைகள் முதலில் அடிப்படைக் கல்விக்கான வசதியைப் பெற்றாக வேண்டும்.

தவிர, இட ஒதுக்கீடு என்பது பொருளாதார ஏற்றத் தாழ்வைச் சரி செய்ய வந்த திட்டம் அல்ல. சாதிகளிடையே ஏற்றத் தாழ்வைச் சரி செய்யவும், எல்லா சாதிகளுக்கும் வாய்ப்புகளைப் பகிர்ந்து கொடுக்கவும் மட்டுமே ஏற்படுத்தப்பட்ட திட்டம். வறுமை ஒழிப்புக்கும் வர்க்க சமத்துவத்துக்கும் வேறு திட்டங்களைத்தான் நாம் உருவாக்க வேண்டும்.

இட ஒதுக்கீட்டில் அந்தந்த சாதிக்கான இடங்களில் முதல் தலைமுறையாகப் படிப்போர், ஏழைகளுக்கு முன்னுரிமை தருவது சரிதான். ஆனால், அதை ரிசர்வேஷன் இடங்களில் மட்டும் செய்வது சரியாகாது. ஓப்பன் கோட்டாவிலும் அதே போல ஏழைகளுக்கு முன்னுரிமை தர வேண்டும். சமையல்கார பிராமணர், சவுண்டி பிராமணர், டிரைவர் முதலியார் ஆகியோரின் குழந்தைகளுக்கு முன்னுரிமை தர, மூன்று தலைமுறையாக வக்கீல்களாக இருக்கும் அய்யர்களும், ஆடிட்டர்களாக இருக்கும் அய்யங்கார்களும், டாக்டர்களாக இருக்கும் முதலியார்களும் முன்வருவார்களானால், மற்ற சாதிகளிடமும் இது குறித்து நாம் விவாதிக்கலாம்.

### 3. துணைவி, மனைவி என்ன வித்தியாசம்?

சமீபத்தில் என்னை அதிர வைத்த விஷயம் - ஒரு பிரபல படைப்பாளியின் திருமணப் பொன்விழாவில் அவரது துணைவியும்

கலந்துகொண்டு வாழ்த்தியதாகும். பொது வாழ்க்கையில் இருக்கும் பெண்கள் கணவர், துணைவர் சகிதம் பகிரங்க மேடைகளில் தோன்றும் புரட்சிகரமான நாள் அடுத்த 50 ஆண்டுகள் கழித்து வரக்கூடும்!

மனைவி, துணைவி என்பவை சட்டத்திலிருந்து தப்புவதற்காக தமிழர்கள் கண்டுபிடித்த இரண்டு சொற்கள் என்பதைத் தவிர, வேறு வித்தியாசமில்லை. மனைவி என்பவர் நிச்சயம் துணைவியும்கூடத்தான். ஆனால், துணைவிகள் எல்லாம் மனைவிகளாக இருக்கத் தேவையில்லை. ஆங்கிலத்தில் இது போல் wife என்றும், companion என்றும் mistress என்றும் குறிப்பிடும் வழக்கம் இல்லை. அங்கே கம்பானியன், மிஸ்ட்ரஸ் என்ற சொற்கள் திருமணமாகாமல் சேர்ந்து வாழ்பவரைக் குறிக்கின்றன. இரண்டாவது, மூன்றாவது வீடுகளைக் குறிப்பன அல்ல. அதற்குப் பயன்படுத்தும் சொல் concubine. சட்டப்படி பலதார மணம் என்பது சரியல்ல என்பதால், ஒருவரின் இரண்டு துணைவிகளில் ஒருவரை மட்டுமே மனைவி என்று குறிக்கும் பழக்கம் தமிழ் மீடியாவால் உருவாக்கப்பட்டு இருக்கிறது. மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது மனைவியைக் குறிக்க என்ன செய்வார்கள்? தோழி, சிநேகிதி, சகி? கடைசி சொல் பொருத்தமாக இருக்கும். சகித்துக்கொள்பவள் சகியல்லவா?

### 4. கல்லூரி படிக்கும் பையன்களும் பெண்களும் எத்தனை மணிக்குள் வீட்டுக்குத் திரும்ப வேண்டும்?

முப்பது ஆண்டுகளுக்கு முன், சென்னை கீழ், நடுத்தர வகுப்புக் குடும்பம் ஒன்றில் விதித்திருந்த கட்டுப்பாடு - பையன்கள் 7 மணிக்கு முன்னரும், பெண்கள் 6 மணிக்குள்ளும் திரும்பிவிட வேண்டும். இன்று அதே குடும்பத்தின் மூன்றாம் தலைமுறையில் இரு பாலாரும் இரவு 10 மணிக்குதான் திரும்புகிறார்கள். உண்மை என்னவென்றால், அந்தக் காலத்தை விட இந்தக் காலத்தில்தான் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் எங்கெங்கே போகிறார்கள், இந்த நிமிடம் எந்த இடத்தில் இருக்கிறார்கள் என்பதையெல்லாம் கவலையுடன், திறமையுடன் கண்டறிந்தபடி இருக்கிறார்கள். தங்கள் தோளுக்கு மிஞ் சிய உயரத்தை பையனும், பெண்ணும் எட்டும் போது, அவர்களைத் தோழர்களாக நடத்தத் தொடங்கிவிட்டால், இந்தச் சிக்கல்கள் இல்லை. அம்மாவையும் அப்பாவையும் இன்னொரு ஆத்மார்த்த சிநேகிதராகக் குழந்தைகளை உணரச் செய்யும் பெற்றோர், நேரக் கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டியிராது. குழந்தைகள் தாமே சுய கட்டுப்பாட்டுக்கு வந்துவிடுவார்கள்.

## *5. குடித்துவிட்டு டியூட்டிக்கு வரும் போலீஸ்காரர்களை என்ன செய்யலாம்?*

*குடித்துவிட்டு டியூட்டிக்கு வருபவர் நல்லவர் என்று கருதும் நிலையை, நெல்லை மாநகர போலீஸ் கமிஷனர் ஏற்படுத்தியிருக்கிறார். அவர் குடித்துவிட்டுப் பொதுமக்கள் மீது கல் எடுத்து அடித்து ரகளை செய்த செய்தியைப் படித்தபோது, குடித்த பின்னரும் கடமையாற்ற டியூட்டிக்கு வருபவருக்குப் பாராட்டு விழாவே நடத்தலாம்தானே?! போலீஸ் துறையில் நேரடியாக ஐ.பி.எஸ். தேர்வாகி வரும் அதிகாரிகளின் தரம் மேலானதாக இருக்கும் என்ற கருத்தும் கற்பனை தான் என்று ஆக்கியிருக்கிறது நெல்லை மாநகர கமிஷனரான பீகார்காரர் ரவி மீதான குற்றச்சாட்டு. வேற்று மாநிலத்தில் வேலை பார்க்கும்போதே போதையில் இத்தனை ரகளை செய்வார் என்றால், சொந்த ஊரில் போட்டால் என்னவெல்லாம் செய்வாரோ? இப்படிப்பட்ட தவறுகளில் பிடிபடும் அதிகாரிகள் மீது துறை ரீதியான நடவடிக்கை மட்டுமே போதாது. பொது இடத்தில் குடித்து விட்டுத் தகராறிலும், வன்முறையிலும் ஈடுபட்டதற்கு வழக்குப் போட்டுக் கைதும் செய்ய வேண்டும்.*

*மேற்படி சம்பவத்தில் அதிகாரிக்கு மது விருந்து அளித்தவர் அரசு கான்ட்ராக்டர் என்று செய்தி வெளியாகியிருக்கிறது. அதிகாரியின் போதை ரகளையைவிட இது இன்னும் ஆபத்தான விஷயம். அரசாங்க இயந்திரத்துக்கும் வியாபாரிகளுக்கும் இருக்கும் ஊழல் உறவின் ஒரு சிறிய அடையாளமே இது. இந்த ஊழல் களையப்பட்டால்தான், அதிகாரிகளின் அதிகார போதை முதல் சாராய போதை வரை தெளியும்.*

*விடுகதை: மாதம் சுமார் 20 ஆயிரம் சம்பாதிக்கும் என் உறவினர் ஒருவர் இந்த வாரம் திடீரென ரத்த அழுத்தம் அதிகரித்ததால், ஒரு த்ரீ ஸ்டார் மருத்துவமனைக்குச் சென்றார். அவரை ஒரு நாள் அப்சர்வேஷனில் மருத்துவமனையில் தங்கச் சொன்னார்கள். டெபாசிட்டாகக் கட்டச் சொன்ன தொகை... -*

*அ. 5 ஆயிரம். ஆ. 15 ஆயிரம் இ. 25 ஆயிரம்.*

*சரியான விடையை ஊகிப்பவருக்கு, மருத்துவமனை பக்கமே செல்லத் தேவையற்ற உடல் நிலை அமைய வாழ்த்துக்கள்!*

*விடை: 25 ஆயிரம். சுமார் 12 மணி நேரம் மட்டும் தங்கி, மூன்று சோதனைகளுக்குப் பின்னர், அதில் பில்தொகையாக ரூ. 5 ஆயிரம் கழிக்கப்பட்டு, மீதி 20 ஆயிரம் திரும்பக் கிடைத்தது.*

**ஆனந்த விகடன்**
***03.09.2006***

# 29
# காமராஜர் ஏன் பிரதமராகவில்லை?

பல பிரதமர்களை உருவாக்கியவர் காமராஜர். அவரே பிரதமராகும் வாய்ப்பு 1966-ல் வந்தது. ஆனாலும், பிரதமராக அவர் விரும்பவில்லை. ஏன் என்று காமராஜரே தன்னிடம் கூறிய காரணத்தை புகழ்பெற்ற மூத்த பத்திரிகையாளர் குல்தீப் நய்யார் இப்போது தன் புதிய புத்தகத்தில் சொல்லியிருக்கிறார். காரணம் கடைசியில்!

'ஸ்கூப்' என்ற குல்தீப் நய்யாரின் புத்தகத்தின் தலைப்பே ஒவ்வொரு பத்திரிகை நிருபருக்கும் நோபல், ஆஸ்கர் விருது போன்றது. வேறு யாருக்கும் கிட்டாத செய்தியை, பெரும் சலசலப்பை ஏற்படுத்தக்கூடிய செய்தியைத் தான் மட்டுமே கண்டுபிடித்து வந்து வெளிப்படுத்துவதுதான் ஸ்கூப்.

சுமார் 60 வருட காலமாகப் பத்திரிகையாளராக இருந்து வரும் 82 வயது குல்தீப் நய்யார், இந்தியா - பாகிஸ்தான் பிரிவினை காலம் முதல் சமீபத்தில் லாகூருக்கு நட்பு பஸ் விட்டது வரை, இந்த 60 வருடங்களில் தான் எழுதிய முக்கிய ஸ்கூப்களை இந்தப் புத்தகத்தில் சுருக்கமாகத் தொகுத்திருக்கிறார்.

குல்தீப்பின் பத்திரிகை - சமூக வாழ்க்கை சுவாரஸ்யமானது. அரசாங்கத்தில் செய்திப் பிரிவு அதிகாரியாக வேலை பார்த்தவர், அரசாங்கத்தாலேயே சிறைவைக்கப்பட்டார். பின்னர், அதே அரசின் தூதராக லண்டனுக்குச் சென்றார். பின்பு, ராஜ்யசபை எம்.பி-யாகவும் ஆனார். அரசியல்வாதிகளின் நண்பராகவும் விமர்சகராகவும் விளங்கியவர். இந்தியாவிலும் வெளிநாட்டிலும் புகழ்பெற்ற ஆங்கிலப் பத்திரிகைகளில் பணியாற்றியிருக்கிறார். தொடர்ந்து இந்தியா - பாகிஸ்தான் நட்பு, மதச்சார்பின்மை ஆகிய இரண்டு கொள்கைகளிலும் பிடிவாதமாக இருக்கும் குல்தீப்... காந்தி, ஜின்னா, மவுன்ட்பேட்டன், நேரு, சாஸ்திரி, காமராஜர், இந்திரா, மொரார்ஜி என பல முந்தைய தலைமுறை பிரபலங்களைப் பேட்டிகள் எடுத்தவர்.

அரசியலில் என்ன நடக்கிறது, ஆட்சியில் என்ன நடக்கிறது என்பதை மோப்பம் பிடிப்பது நிருபர்கள் வேலை. அவர்களுக்குத் துளியும் தகவல் தெரியாமல் தடுப்பது அரசியல்வாதிகள், அதிகாரிகள் வேலை. இந்தக் கண்ணாமூச்சி ஆட்டத்தில் மறுபடி மறுபடி ரவுண்ட் கட்டி ஜெயித்தவர் குல்தீப்.

அதிகாரிகள்தான் அவருக்குச் செய்திகளை லீக் பண்ணுகிறார்கள் என்று பிரதமர் இந்திரா நினைத்தார். எனவே, ஓர் அமைச்சரவைக் கூட்டத்துக்கு அதிகாரிகளையே அவர் அழைக்கவில்லை. ஆனாலும், அமைச்சரவை ரகசிய விவாதங்கள் குல்தீப் வேலை செய்த பத்திரிகையில் மறுநாள் வெளியாகின. 'பேப்பரைப் படித்தால், நேற்று கேபினட் கூட்டத்தில் குல்தீப் நய்யாரும் கலந்து கொண்ட மாதிரி தெரிகிறது' என்று எரிச்சலோடு சொன்னார் இந்திரா.

தன் நீண்ட முடியை வெட்டி கிராப் செய்து கொண்டதும் தன் லுக் எப்படி இருக்கிறது என்று சகஜமாக குல்தீப்பிடம் கருத்து கேட்கும் அளவுக்கு சிநேகமாக இருந்த இந்திரா தான், அவரை நெருக்கடி நிலையின் போது கைது செய்து சிறையில் அடைத்தார்.

பத்திரிகைச் சுதந்திரத்துக்காகப் போராடியதில் பெற்ற சிறை வாசத்தில் 10 கிலோ எடை இழந்த குல்தீப், நெருக்கடி நிலையை எடுத்துவிட்டுத் தேர்தல் நடத்தப்போகிறார் இந்திரா என்ற ஸ்கூப் செய்தியை பின்னர் வெளியிட்டார். பாகிஸ்தான் பிரதமராக இருந்த பூட்டோவைக் கைது செய்து, சிறையில் வைத்திருந்த ராணுவ ஆட்சியாளர் ஜியா உல் ஹக்கைச் சந்தித்த குல்தீப் தான், பூட்டோ உடனடியாகத் தூக்கிலிடப்படவிருக்கும் செய்தியையும் முதலில் வெளியிட்டவர்.

இதே போல், பாகிஸ்தான் அணுகுண்டு தயாரித்துத் தயாராக வைத்திருக்கிறது என்ற செய்தியை அதன் அணுகுண்டுத் தந்தையான விஞ்ஞானி ஏ.க்யூ.கானிடம் பேட்டி எடுத்து, முதலில் வெளியிட்டவரும் இவரே!

ராஜீவ் காந்தியுடன் இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே ஒப்பந்தம் போடுவதற்கு முன்பாக ஜெயவர்த்தனேவை குல்தீப் நய்யார் எடுத்த பேட்டிதான், ஜெயவர்த்தனேவை நம்பலாம் என்ற நிலைக்கு வெளியுறவு அதிகாரி தீட்சித்தையும் ராஜீவ்காந்தியையும் தள்ளியது. ஆனால், ஜெயவர்த்தனே ஒருபோதும் தமிழர்களுக்கு அதிகாரத்தைப் பகிர்ந்து தர விரும்பாதவராகவே தெரிந்தார் என்று குல்தீப் குறிப்பிடுகிறார்.

குல்தீப் நய்யாரின் புத்தகம் 60 வருட இந்தியத் துணைக் கண்டத்தின் உள்நாட்டு, வெளிநாட்டு அரசியல் வரலாற்றோடு பின்னிப் பிணைந்திருக்கிறது.

ஒரு பத்திரிகை நிருபர் என்பவர் தன் வேலையின் நிமித்தம் அதிகாரத்தில் இருக்கும் மிகப் பெரிய சக்திகளுடன் உறவாடும் வாய்ப்பைப் பெறுகிறார். ஆனால், அதனாலேயே தனக்கும் பெரிய அதிகாரமும் சக்தியும் வந்துவிட்டதாக நிருபர் மயங்கிவிடக்கூடாது. வள்ளுவர் சொல்வது போல், நெருப்பில் குளிர் காயும் நிலை தான். மிகவும் நெருங்கினால் சுட்டுவிடும். அதிகம் விலகி இருந்தால், குளிர் போக்க உதவாது. செய்தி சேகரிக்கும் நிருபர்களுக்குத் தேவையான இந்தப் பக்குவத்தை குல்தீப் நய்யார் பெற்றிருந்ததன் அடையாளமாக 'ஸ்கூப்' தொகுப்பு இருக்கிறது. எந்த நிலையிலும் ஒரு நிருபர் தன் நெறிகளைக் கைவிடக்கூடாது என்பதற்கும் குல்தீப் நய்யாரின் அனுபவங்கள் ஆதாரமாக இருக்கின்றன.

காமராஜர் பிரதமர் ஆக விரும்பாததற்குக் காரணம், அவருடைய மொழிக் கொள்கைதான் என்கிறார் குல்தீப், 'நான் பிரதமராக ஆவதென்றால் ஆகியிருக்கலாம். ஆனால், அது நியாயமானதும் முறையானதும் அல்ல. ஏனென்றால் எனக்கு இந்தி, ஆங்கிலம் இரண்டும் தெரியாது. இந்தியாவின் பிரதமர் பதவிக்கு வருபவருக்கு நிச்சயம் இரண்டில் ஒன்றாவது தெரிந்திருக்க வேண்டும்' என்று காமராஜர் தன்னிடம் சொன்னதாகக் கூறுகிறார் குல்தீப்.

**ஆனந்த விகடன்**
***22.10.2006***

# 40
# பதில்களைத் தேடும் கேள்விகள்!

சமுதாயத்தில் முதலில் தோன்றிய தொழில் என்று வர்ணிக்கப்படும் விபசாரம், சட்டப்படி குற்றமே அல்ல! முன்பின் தெரியாத இருவர் உடல் உறவில் ஈடுபடுவதான விபசாரச் செயலும் குற்றம் அல்ல. ஆம். வயது வந்த இருவர் பரஸ்பர சம்மதத்துடன் உடல் உறவில் ஈடுபடுவது சட்டப்படி குற்றமாகாது.

விபசாரத்துக்கு அழைப்பதுதான் சட்டப்படி குற்றம். விபசாரத்தில் கட்டாயமாக ஈடுபடுத்த ஒருவரைக் கடத்துவதுதான் குற்றம்.

விபசாரத்துக்கு அழைப்பது குற்றம் என்றால், அழைப்பது யார் பாலியல் தொழிலாளரா? அல்லது, அவரிடம் செல்ல விரும்பும் வாடிக்கையாளரா? சட்டம் இதுவரை பாலியல் தொழிலாளரைத்தான் அழைப்பவராகக் கருதி வருகிறது. அழைக்கப்பட்டவர், அதாவது வாடிக்கையாளர் குற்றவாளி அல்ல!

இந்த 'அழைக்கும்' (soliciting) குற்றம் என்பதே அபத்தமானது. பெரும்பாலான போலீஸ் ரெக்கார்டுகளில் இத்தகைய வழக்குகளில், பாலியல் தொழிலாளிகள் தெரு ஓரத்திலோ, வேறு ஒரு பொது இடத்திலோ நின்று, போகிற வருகிறவரையெல்லாம் விபசாரத்துக்கு அழைத்ததாகவே எழுதப்பட்டிருக்கும். ஆனால், கைது நடந்ததென்னவோ ஏதோ ஒரு விடுதி அறைக்குள் தான்! தமிழ்நாட்டிலேயே இவ்வாறு கைதான சில பெண்கள், போலீஸ் தெரிவித்தது பொய் என்றும், தாங்கள் நின்று அழைத்ததாகச் சொல்லப்பட்ட இடத்திலேயே தாங்கள் இருக்கவில்லை என்றும் கோர்ட்டில் நிரூபித்து போலீசுக்கு எதிராக வழக்கில் ஜெயித்திருக்கிறார்கள்.

விபசார வழக்குகள் எல்லாமே போலீஸுக்கும் வாடிக்கையாளர்களுக்கும் தரகர்களுக்கும் சாதகமானவையே தவிர, சமூக ஒழுக்கத்தை மேம்படுத்தியவை அல்ல!

ஒரு பக்கம் எய்ட்ஸ் போன்ற கொடிய நோய் பற்றிய விழிப்பு உணர்வு மற்றும் தடுப்புப் பிரசாரங்களுக்குப் பாலியல் தொழிலாளிகளின் ஒத்துழைப்பு அரசுக்கு மிக மிகத் தேவைப்படுகிறது. அப்போது அரசு அவர்களை மனிதர்களாக மதிக்கிறது. இன்னொரு பக்கம், அதே அரசு அமைப்பின் போலீஸ் இயந்திரம் அவர்களை வதைக்கிறது. லஞ்ச ஒழிப்புச் சட்டத்தின்படி லஞ்சம் கேட்பதும் குற்றம்; கொடுப்பதும் குற்றம். ஆனால், விபசாரத்தில் ஒரு தரப்பு மட்டுமே குற்றவாளியாகக் கருதப்படுகிறது.

இதை மாற்றியமைக்க வேண்டும் என நீண்ட காலமாக மகளிர் அமைப்புகளும் பாலியல் தொழிலாளர் அமைப்புகளும் அரசிடம் கோரி வந்திருக்கின்றன. ஒருவழியாக இப்போதைய டெல்லி காங்கிரஸ் கூட்டணி அரசு, இந்தக் கோரிக்கையை ஏற்று சட்டத் திருத்த மசோதாவைக் கொண்டு வந்து விட்டது. அதை மக்களவையின் தேர்வுக் குழு ஆய்வு செய்து, தன் பரிந்துரைகளையும் தந்திருக்கிறது. விரைவில் இது சட்டமாகிவிடும்.

இதன்படி, இனி விபசாரத்தில் ஈடுபடும் பாலியல் தொழிலாளி குற்றவாளியாகக் கருதப்படமாட்டாள். வாடிக்கையாளர்கள்தான் குற்றவாளிகளாகக் கருதப்படுவார்கள். ஆனால், இந்தப் புரட்சிகரமான திருத்தத்தை டெல்லி, குஜராத், மத்தியப்பிரதேசம், ராஜஸ்தான், கேரள அரசுகள் மட்டும் எதிர்த்துள்ளன. இதர மாநில அரசுகள் அங்கீகரித்துள்ளன.

இப்போதுள்ள நடைமுறைப்படி வாடிக்கையாளரை விட்டுவிட்டு பாலியல் தொழிலாளியை மட்டுமே கைது செய்வதில் மிக அதிகமாகப் பாதிக்கப்படுபவர்கள் பெண்களும், அரவாணிகளுமே! உண்மையில், பாலியல் தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்களைப் பாதிக்கப் பட்டவர்களாகக் கருதாமல், கொடூரக் குற்றவாளிகளாகத்தான் அதிகார அமைப்பு கருதி வந்திருக்கிறது. இதனால் லாபம் அடைந்தவர்கள் அந்தப் பெண்களைப் பயன்படுத்தியவர்கள்தான்! இந்தச் சூழ்நிலை, இப்போது வரும் சட்டத்திருத்தத்தால் நிச்சயம் பெரும் மாற்றமடையும்.

பாலியல் தொழிலாளர்களுடன் பணிபுரியும் தொண்டு அமைப்புகளின் வாயிலாகப் பல முறை அவர்களுடன் பணிபுரியும் வாய்ப்புகள் கிட்டின. ஒரு முறை, அவர்கள் பங்கேற்ற ஆவணப்படத்தைத் தயாரித்தேன். இன்னொரு முறை, அவர்கள் கருத்தை வெளிப்படுத்தும் சிறு நாடகம் ஒன்றை எழுதி, அவர்களே நடிக்க, இயக்கினேன்.

*அவர்கள் யாரும், எப்போதும் தங்கள் வாடிக்கையாளர்களைப் பற்றி குறை சொன்னதே இல்லை. தரகர்கள், போலீஸ் இருவரின் கொடுமைகளைப் பற்றி மட்டுமே அவர்கள் அதிகமாகவும் ஆவேசமாகவும் பேசினார்கள். தங்கள் தொழிலை அவர்கள் யாரும் இழிவாகக் கருதவே இல்லை . தாங்கள் இதற்கு வரக் காரணமாக இருந்த காதலன், கணவன், குடும்பத்தார் ஆகியோர் பற்றிய வருத்தங்களே அவர்களுக்கு அதிகம். போலீஸ், தரகர் வன்முறையிலிருந்து விடுதலை ஒன்றே அவர்களின் ஒற்றைக் கோரிக்கை.*

***குடியரசுத் தலைவர் பதவியில் இருப்பவர் மீது நாம் வழக்கு போட முடியுமா, முடியாதா? சட்டம் என்ன சொல்கிறது?***

*1. போடலாம்.*

*2. போட முடியாது.*

*எது சரியான விடை என்பதே இப்போது கேள்விக்குறியாகி இருக்கிறது.*

*அரசியல் சட்டம் 361(1) பிரிவின்படி குடியரசுத் தலைவர், ஆளுநர் ஆகியோர் தங்கள் பதவி களுக்கான அதிகாரத்தின் கீழும் கடமைகளின் கீழும் செய்யும் எந்தச் செயல் பற்றியும் எந்த நீதிமன்றமும் கேள்வி எதுவும் கேட்க முடியாது. சட்டப்பிரிவு 361(4)ன்படி, குடியரசுத் தலைவரும் ஆளுநரும் அந்தப் பதவியில் இருக்கும்போதோ, அல்லது அதற்கு வருவதற்கு முன்போ செய்த எந்தச் செயல் மீதான, எந்த சிவில் சட்ட நடவடிக்கையையும் அவர்கள் அந்தப் பதவியில் இருக்கும் காலம் வரை மேற்கொள்ள முடியாது. அதாவது, ஒருவர் ஜனாதிபதி/கவர்னர் பதவிக்கு வருவதற்கு முன்பு கடன் வாங்கியிருந்தால், அந்தக் கடனைக் கேட்டு வழக்குப் போட, அவர்களின் பதவிக் காலம் முடியும் வரை காத்திருக்க வேண்டும்! இது இப்படியிருக்க... காசி பல்கலைக்கழகத்தின் ஒரு முக்கிய பதவியான விசிட்டர் பதவியில் ஜனாதிபதி இருக்கிறார். விசிட்டருக்கு மேற்பார்வையிடும் அதிகாரம் உள்ளது. விசிட்டர் என்ற முறையில் பல்கலைக்கழகத்துக்குச் சென்றபோது, அங்கே பேராசிரியர் அசோக் சொன்கார் என்பவரை வேலை நீக்கம் செய்தார் அப்துல்கலாம். அதை எதிர்த்து அசோக் போட்ட வழக்கில், இப்போது உச்ச நீதிமன்றம் அப்துல்கலாமுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறது!*

***உடலை விற்றுச் சம்பாதிப்பது ஒழுக்கமானதா?***

*‘எது ஒழுக்கம்?’ என்பதே அவர்களின் பதில் கேள்வி. பலரும் சொன்ன பதில்கள்... “இந்தச் சமூகத்தில் எல்லாரும்தான் உடலைப்*

*பயன்படுத்திச் சம்பாதிக்கிறீர்கள். மூட்டை தூக்குவதிலிருந்து கணினியை இயக்குவது வரை உடலின் பல பாகங்கள் பயன்படுகின்றன, நாங்கள் பயன்படுத்தும் பாகங்கள் மட்டும் ஏன் உங்களுக்கு ஒழுக்கப் பிரச்சனை ஆகிவிடுகிறது? உங்களுக்கு விருப்பம் இல்லாத வேலைகளை எல்லாம் அலுவலகத்தில் மூளையைப் பயன்படுத்திச் செய்துவிட்டுச் சம்பளம் வாங்கும்போது மட்டும் ஏன் அது ஒழுக்கப் பிரச்சனை ஆவதில்லை? இது விபசாரம் என்றால், அதுவும் விபசாரம் இல்லையா?"*

*சில கேள்விகளுக்கு நமது சமூகத்தில் நியாயமான பதில்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. தெரிந்தாலும் சொல்ல முடிவதில்லை!*

**ஆனந்த விகடன்**
***06.12.2006***

# 43

# சசிகலா நிதி அமைச்சர்... கனிமொழி கல்வி அமைச்சர்?

ஒவ்வொரு வாரமும் எழுதியது அச்சில் வந்த பிறகு, வாசகர்களிடமிருந்து நேரிலோ, கடிதம் - தொலைபேசி வாயிலாகவோ விதவிதமான எதிர்வினைகள் எழுதியவருக்கு வந்து சேர்வது இயல்பு. அவற்றில் பூச்செண்டுகள், குட்டுகள் இரண்டையும் விட புதிர்களுக்கு வரும் எதிர்வினைகள் என்னை அதிகம் சிந்திக்கத் தூண்டுகின்றன. அப்படிப்பட்ட ஒரு புதிர்க் கேள்வி பல வாசகர்களிடமிருந்து... குறிப்பாக, இளம் கணினி உலக வாசகர்களிடமிருந்து அடிக்கடி எனக்கு வருகிறது.

'அமெரிக்காவின் அரசியலைக் கடுமையாக விமர்சிக்கிறீர்களே, அமெரிக்காவிடமிருந்து கற்றுக்கொள்ள நமக்கு எதுவுமே கிடையாதா?' என்பதுதான் அந்தக் கேள்வி.

அமெரிக்கர்களிடமிருந்து பிறர் கற்றுக்கொள்ள நிறைய இருக்கலாம். உலகம் முழுவதும் ஒரு கலாசாரத்திடமிருந்து இன்னொரு கலாசாரம் கற்பதும் பகிர்வதும் இயல்பானது தான். ஆனால் அமெரிக்க அரசிடமிருந்து கற்க என்ன உள்ளது என்று பார்த்தால், அரசியல் ரீதியாகவோ தார்மிக ரீதியாகவோ பெரிதாக எதுவும் இல்லை. அதே சமயம் அமெரிக்க அரசியல் சட்டத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ள பல விஷயங்கள் உள்ளன. அதில் ஒன்றைப் பார்ப்போம்.

எதையும் கேள்வி கேட்பதற்கான உரிமை மிக மிக அவசியம். அப்படிப்பட்ட உரிமையை, சில முக்கியமான பதவிகளுக்கு நியமனம் செய்யும் விஷயத்தில் மக்கள் பிரதிநிதிகளிடம் கொடுத்திருக்கிறது அமெரிக்க அரசியல் சட்டம்...

மன்மோகன் சிங் அண்மையில் பிரணாப் முகர்ஜியை புதிய வெளியுறவு அமைச்சர் ஆக்கினார். வேறு சிலரின் துறைகளை மாற்றி அமைத்தார். இதையெல்லாம் கேள்வி கேட்க முடியுமா? அது பிரதமரின் உரிமை என்பதுதான் நம் நாட்டில் நிலவும் கருத்து... வழக்கம்.

ஆனால், அமெரிக்க ஜனாதிபதி புதிதாக ஒரு துறைக்கு அமைச்சரை நியமிக்கும் போது, அவர் அந்தப் பதவிக்கு ஏற்றவர்தானா என்று கேள்வி கேட்கும் உரிமை சட்டத்திலேயே செனட்டுக்குத் தரப்பட்டிருக்கிறது. அண்மையில் இடைத் தேர்தல்களில் ஜனாதிபதி புஷ் பலத்த அடி வாங்கி, செனட் பெரும்பான்மை, காங்கிரஸ் பெரும்பான்மை இரண்டையும் எதிர்க்கட்சி தட்டிச் சென்றதும், முதல் வேலையாக தன் ராணுவ அமைச்சரை மாற்றினார்.

(இங்கே பிரதமருக்கு உள்ள அதிகாரம் அங்கே ஜனாதிபதியுடையது. இங்கே நாம் அமைச்சர் என்று சொல்பவர்களை அவர்கள் செயலாளர் என்று அழைப்பார்கள். நம் புரிதலுக்காக அவர்களை அமைச்சர் என்றே சொல்லிக்கொள்வோம்.)

தேர்தல் தோல்விக்கு முக்கிய காரணம், இராக்கில் அமெரிக்கா நடத்திய யுத்தத்தை மக்கள் விரும்பவில்லை என்பதுதான். எனவே, அந்த யுத்தத்துக்கு தானும் பொறுப்பு என்றாலும், ராணுவ அமைச்சரை மாற்றி மக்கள் தீர்ப்பை தான் மதிப்பது போன்ற நாடகத்தில் புஷ் ஈடுபட்டார் என்பது அந்த ஊர் அரசியல்.

நாம் இப்போது கவனிக்க வேண்டியது புதிய நியமனங்களின்போது கேள்வி கேட்கும் உரிமை பற்றித்தான். பதவி நீக்கப்பட்ட ரம்ஸ்ஃபீல்டுக்கு பதிலாக நியமிக்கப்பட்டவர் ராபர்ட் கேட்ஸ். புஷ் அவர் பெயரை அறிவித்ததும், அவர் பதவிப் பிரமாணம் செய்து அமைச்சராகிவிடமுடியாது.

அமெரிக்க அரசியல் சட்டப்படி, ஜனாதிபதி புது அமைச்சர் பெயர் அறிவிப்பை செனட்டுக்கு பகிரங்கமாகத் தெரிவிக்க வேண்டும். செனட் என்பது நம் நாட்டின் மக்களவைக்குச் சமமான அமைப்பு. அங்கே செனட்டர். இங்கே எம்.பி.

நம் மக்களவையில் இருப்பது போலவே அந்த செனட்டிலும் ஒவ்வொரு துறையையும் கண்காணிக்க ஒரு கமிட்டி உண்டு. கல்வி, ராணுவம், வெளியுறவு என்று ஒவ்வொரு கமிட்டியிலும் எல்லா கட்சிகளையும் சேர்ந்த சில உறுப்பினர்கள் இருப்பார்கள். நம் எம்.பி-க்கள். கமிட்டிக்கு இல்லாத அதிகாரம் அங்கே செனட் கமிட்டிக்கு இருக்கிறது. அதுதான் நியமனத்தைக் கேள்வி கேட்கும் அதிகாரம்.

ஜனாதிபதியால் நியமிக்கப்பட இருப்பவரை அந்தத் துறையின் கமிட்டி உறுப்பினர்கள் கேள்விகள் கேட்பார்கள், அவற்றுக்கெல்லாம்

பதில் சொல்லியே ஆகவேண்டும். பதில் வந்தபிறகு கமிட்டி தன் கருத்தை செனட்டுக்குத் தெரிவிக்கும். நியமனத்துக்கு செனட்டின் பெரும்பான்மை ஆதரவு இல்லையென்றால், அந்த நபரை பதவிக்கு நியமிக்க முடியாது.

அமெரிக்க அரசின் அமைச்சர் பதவிகளுக்கு மட்டும் அல்ல; அந்த நாட்டு உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதி, இதர நீதிபதிகள் நியமனமும் இதே போன்ற நடைமுறைக்கு உட்பட்டதுதான். அமெரிக்க உளவு அமைப்பான சி.ஐ.ஏ-வின் தலைவர் பதவிக்கும் இதேபோல செனட் ஒப்புதல் தேவை. அந்தப் பதவிகளுக்கு தான் நியமிக்க விரும்புவோர் பெயர்களை ஜனாதிபதி அறிவித்ததும் செனட் கமிட்டி விசாரணைகள் ஆரம்பமாகிவிடும்.

இந்த விசாரணைகளின் விளைவு என்ன? எப்படியும் ஜனாதிபதியின் கட்சிக்கு செனட்டில் பெரும்பான்மை இருந்தால், அவர் விரும்புபவர் கடைசியில் பதவிக்கு வந்து விடுவார்தானே?

ஆனால், அசல் பயன் அது அல்ல. எப்படிப்பட்டவர் நியமிக்கப்படுகிறார் என்பதை விசாரணை மூலமாகவும், அதையொட்டி மீடியா வெளியிடும் செய்திகள் மூலமாகவும் பொதுமக்கள் தெரிந்து கொள்ள முடிவதுதான் உண்மையான லாபம்.

ஜனநாயகத்தில் இந்த பகிரங்கத்தன்மை மிக முக்கியமானது. அமெரிக்க அரசியல் சட்டத்தின் இந்த உயர் பதவி நியமன நடைமுறை அதை உறுதி செய்கிறது.

செனட் கமிட்டி விசாரணைகளில் உயர் பதவிக்கு நியமிக்கப்பட இருப்பவர்களின் தனி ஒழுக்கம், கொள்கைகள் பற்றிய பார்வை முதல் ஊழல் குற்றச்சாட்டுகள் வரை விளக்கங்கள் கேட்கப்படுகின்றன. செனட் விசாரணை ஓட்டெடுப்பில் நிராகரிக்கப்பட்டவர்கள் பதவி பெற முடியாமல் போன வரலாறும் கணிசமாக உண்டு.

இந்த அருமையான நடைமுறை நம் நாட்டுக்கு அவசரமாகத் தேவைப்படுகிறது. மத்திய அரசின் அமைச்சர்கள், ஐ.பி., ரா போன்ற உளவு அமைப்புகளின் தலைவர்கள், உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனங்களில் மட்டுமல்ல... ஒவ்வொரு மாநிலத்திலும் கூட அதே போன்ற பதவிகளுக்கு நியமனத்தின் போது முறையே மக்களவை, சட்டப்பேரவை கமிட்டி விசாரணைகள் நடந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்?

வருங்காலத்தில் ஒரு வேளை, ராகுல்காந்தியை உள்துறை அமைச்சராக காங்கிரஸும், சசிகலாவை நிதி அமைச்சராக அ.தி.மு.கவும், கனிமொழியைக் கல்வி அமைச்சராக தி.மு.க-வும் நியமிக்க நேர்ந்தால், அது எந்த அளவுக்குத் தகுதி உடைய நியமனம் என்பதை விசாரிக்கவும் மக்கள் தெரிந்துகொள்ளவும் சட்டப்படியான வாய்ப்பு கிடைக்குமே!

அமெரிக்காவிலிருந்து தனியார் கம்பெனிகளை வரவேற்று சலுகைகளைக் கொட்டிக் கொடுத்து ரத்தினக் கம்பளம் விரிக்கும் நம் தலைவர்கள், இப்படிப்பட்ட சட்டப் பிரிவுகளை இறக்குமதி செய்வது பற்றி ஏன் யோசிப்பதில்லை என்று நாம் யோசிப்போம்.

**ஆனந்த விகடன்**
*27.12.2006*